**செய்தி வெளியீடு எண்: 14** **நாள்: 03.02.2022**

## நீட் விலக்கு சட்ட முன்வடிவு குறித்து தமிழ்நாடு ஆளுநர் மாளிகை செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், இளங்கலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான நீட் தேர்விலிருந்து விலக்கு கோரிய சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.43/2021-யையும், இந்த சட்ட முன்வடிவுக்கு அடிப்படையாக இது தொடர்பாக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் அறிக்கையையும் விரிவாக ஆய்வு செய்த பின்னரும், மருத்துவ சேர்க்கையில் நீட் தேர்வுக்கு முந்தைய சமூகநீதி நிலையைக் குறிப்பாக, சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் பின்தங்கிய ஏழை மாணவர்களின் நிலையை ஆய்வு செய்த பின்னரும், இந்த சட்ட முன்வடிவு, இம்மாநிலத்திலுள்ள மாணவர்களின் குறிப்பாக கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் நலன்களுக்கு எதிரானது என்று கருதுகிறார். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இச்சட்ட முன்வடிவை மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு விரிவான விளக்கங்களுடன் அவையின் மறுபரிசீலனைக்காக 01.02.2022 அன்று திருப்பி அனுப்பியுள்ளார்.

மாண்பமை உச்சநீதிமன்றம் கிறித்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர் அமைப்பு எதிர் இந்திய அரசு (2020) வழக்கில், இப்பொருண்மையை குறிப்பாக சமூக நீதி நோக்கத்திலிருந்து விரிவாக ஆராய்ந்து ஏழை, எளிய மாணவர்கள் மீதான பொருளாதார சுரண்டலைத் தடுக்கக்கூடியதென்றும், சமூக நீதியை முன்னெடுத்துச் செல்லவும், நீட் தேர்வின் தேவையை உறுதி செய்துள்ளது.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22.** **ஒப்பம்**

**நாள்:03.02.2022** **கூடுதல் இயக்குநர்(ம.தொ)**

**Press Release No: 14** **Dated: 03.02.2022**

## PRESS NOTE FROM RAJ BHAVAN, TAMIL NADU ON NEET EXEMPTION BILL

The Hon'ble Governor of Tamil Nadu, after detailed study of the L.A.Bill No.43 of 2021 for admission to Undergraduate Medical Courses seeking exemption from NEET, and the Report of the High Level Committee constituted by the State Government in this regard which is the basis for the Bill and also examining the pre-NEET status of social justice in Medical admission especially for students coming from socially and economically poor background, is of the opinion that the Bill is against interests of the students specially the rural and economically poor students of the State. Hence, the Hon'ble Governor has returned the Bill to the Hon'ble Speaker, Tamil Nadu Legislative Assembly on February 01, 2022, giving detailed reasons, for its re-consideration by the House.

The Hon'ble Supreme Court in Christian Medical College, Vellore Association Vs. Union of India (2020) also has comprehensively examined the issue specially from the Social Justice perspective and upheld NEET as it prevents economic exploitation of poor students and is in furtherance of social justice.

---

Raj Bhavan, Chennai-22 Sd/xx

Dated: 03.02.2022 Addl.Director (PR)